**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 593/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 13.10.2025.**

| | |
|---|---|
| **Name : செல்வகுமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடலில் குடியிருந்து தெர்மலில் வேலை செய்கிறேன். சாட்சி 1 பரமசிவம் என் வீட்டு பக்கத்தில் உள்ள நபர். அவர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். கடந்த 2024ம் வருடம் என் வீட்டு பக்கத்தில் உள்ள பரமசிவம் என்பவரை யாரோ அடித்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 01.08.2024ம் தேதி மதியம் 01.30 மணிக்கு நான் என் வீட்டிலிருந்த போது எச்.டி.எப்.சி வங்கியால் ஜப்தி செய்யப்பட்ட எதிரியின் வீட்டில் பரமசிவம் என்பவர் பாதுகாப்பு பணியில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது பரமசிவம் என்பவரை எதிரி கெட்ட வார்த்தையால் பேசி என் வீட்டிற்கு யார் காவல் வைப்பது என்று பேசி பிரச்சனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

பிறகு பரமசிவத்தின் கழுத்தில் பின்னால் கீழே தள்ளி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 593/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 13.10.2025.**

| | |
|---|---|
| **Name : பிரேம்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது பவானியில் குடியிருந்து தெர்மலில் வேலை செய்கிறேன். சாட்சி 1 பரமசிவம் என் வீட்டு பக்கத்தில் உள்ள நபர். அவர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். கடந்த 2024 ம் வருடம் நான் வேலைக்கு சேர்த்துவிட்ட வகையில் பரமசிவம் என்பவர் பழக்கம். பரமசிவம் என்பவரை யாரோ அடித்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 01.08.2024 ம் தேதி மதியம் 01.30 மணிக்கு நான் பவானியில் உள்ள என் வீட்டிலிருந்த போது எச்.டி.எப்.சி வங்கியால் ஜப்தி செய்யப்பட்ட எதிரியின்

வீட்டில் பரமசிவம் என்பவர் பாதுகாப்பு பணியில் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது பரமசிவம் என்பவரை எதிரி கெட்ட வார்த்தையால் பேசி என் வீட்டிற்கு யார் காவல் வைப்பது என்று பேசி பிரச்சனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. பிறகு பரமசிவத்தின் கழுத்தில் பின்னால் கீழே தள்ளி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) கடந்த 03.08.2024 ம் தேதி மாலை 6 மணிக்கு நான் மற்றும் சிவநாதன் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான எச்.டி.எப்.சி வங்கியால் ஜப்தி செய்யப்பட்ட எதிரி வீட்டருகில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.